**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 98/2023 |
| Deposition of Witness | : | PW- 1 |
| Name | : | மதன் கார்த்தி |
| Father Name | : | சோமசுந்தரம் |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 29 |

**All accused present**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 13.07.2023.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருப்பூர் நாச்சிபாளையத்தில் வசித்து வருகிறேன். மருந்தகம் வைத்துள்ளேன். எனது வீடு திருப்பூர் நாச்சிபாளையத்தில் ஹவுசிங் யூனிடில் உள்ளது. வீட்டில் நான், எனது மனைவி, எனது தாயார் மற்றும் தங்கையுடன் வசித்து வருகிறேன். கடந்த 05.01.2023 ம் தேதி மாலை 04.00 மணியளவில் வீட்டை பூட்டிவிட்டு நல்லிகவுண்டன்பாளையத்தில் உள்ள எனது மருந்தகத்திற்கு சென்றுவிட்டோம். அன்றைய தினம் இரவு 10.45 மணியளவில் வீட்டிற்கு வந்தபோது வீட்டில் ஏற்கனவே நாங்கள் போட்டு சென்ற லைட் அணைந்திருந்தது. வீட்டின் கேட் லாக்கில்தான் இருந்தது. நாங்கள் வீட்டின் கேட்டை திறந்து உள்ளே சென்று பார்த்த போது வீட்டின் பிரதாண கதவு மரகதவு நெம்பி உடைக்கப்பட்டிருந்தது.

2. நான் உடனே எனது நண்பருக்கு தகவல் தெரிவித்தேன். நாங்கள் உள்ளே சென்று பார்த்தபோது வீட்டின் முதல் மாடியில் உள்ள படுக்கை அறையில் பூட்டிருந்த மரபீரோ நெம்பி உடைக்கப்பட்டிருந்தது. அந்த பீரோவில் இருந்த 6 பவுன் ஆரம், 4 பவுன் வளையல் ஒரு ஜோடி, ஒரு பவுன் பிரேஸ் லேட், 2 1/2 பவுன் பிரேஸ் லேட், 3/4 பவுன் மோதிரம், 1 1/2 பவுன் மோதிரம், 1 பவுன் தங்க காயின், 2 1/2 பவுன் நெக்லஸ் ஆகியவை காணாமல் போயிருந்தது.

3. அன்றைய தினம் நள்ளிரவு ஆகிவிட்டதால் மறுநாள் காலை 10.00 மணியளவில் ஊத்துக்குளி காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தேன். என்னுடன் அருகே குடியிருக்கும் சபரி உடன் வந்தார். புகாரை நான் எழுதிகொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகாரில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **(அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4. அன்றைய தினம் அரை மணி நேரத்தில் போலீசார் வீட்டிற்கு வந்து கைரேகைகள் சேகரித்தார்கள். புகைப்படம் எடுத்தார்கள். எங்களது வீட்டு அருகே கண்காணிப்பு கேமராக்கள் எதுவும் இல்லை.

5. கடந்த 23.03.2023 ம் தேதி இரவு நேரத்தில் போலீசார் எனக்கு போன் செய்து எங்கள் வீட்டில் திருடிய நபர்களை பிடித்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். அப்போது ஆஜர் எதிரிகள் இருவரும் காவல் நிலையத்தில் இருந்தார்கள். போலீசார் அவர்கள்தான் எங்கள் வீட்டில் களவு செய்ததாக தெரிவித்தார்கள். **(சாட்சி நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரிகளை அடையாளம் காட்டுகிறார்.)**

6. போலீசார் எங்கள் வீட்டில் களவு செய்த நகைகளை எதிரிகள் உறுக்கி விட்டதாக கூறி 10 பவுன் தங்க கட்டியை கொடுத்தார்கள். மித தங்கத்தை எதிரிகள் விற்று செலவு செய்து விட்டதாக தெரிவித்தார்கள். நான் அவற்றை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுகொண்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தங்க கட்டியை தான் நீதிமன்றத்தில் பெற்றுசென்றேன். **(அந்த புகைப்படம் மற்றும் இந்திய சாட்சி சட்ட பிரிவு 65(பி) ன் கீழான சான்று அ.சா.ஆ. 2 வரிசையாக ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்பில் வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

B DHARANEETHER Digitally signed by B DHARANEETHER Date: 2023.07.13 18:30:38 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.